மாநகராட்சி மன்றம்


# உதயன்

விலை ரூபா 6-00

13 சுடர்வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 26 வெள்ளிக்கிழமை (10 07-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 192


# வாஜ்பாயை சந்திக்க தமிழ்க் கட்சிகளுக்கு வாய்ப்பு கிடைக்குமா?

## ஏற்பாடு இன்னுமில்லை

கொழும்பு, ஜூலை 10

இம் மாத இறுதியில் கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் பங்குபற்ற வரும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழ்க்கட்சிகள் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கோரியுள்ள போதும் அதற்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என்று தமிழ்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகும் சார்க் மாநாட்டில் பங்குபற்ற இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இலங்கை வருகிறார்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகவும்—

(9 ஆம் பக்கம் பார்க்க)

## பதில் பாதுகாப்பு அமைச்சராக அனுருத்த

கொழும்பு, ஜூலை 10

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த பதில் பாதுகாப்பு அமைச்சராக நேற்றுப் பதவி ஏற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்றதையடுத்தே ரத்வத்த பதில் பாதுகாப்பு அமைச்சராக பதவி ஏற்றார்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## உயிலங்குளம் ஊடான தடை மேலும் 2 வாரங்கள் இருக்கும்

வவுனியா, ஜூலை 10

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு உயிலங்குளம் ஊடாக பொது மக்கள் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடை மேலும் 15 நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதியில் வாந்திபேதி, நோய் பரவாமல் தடுக்கும் நோக்கில் முன்னேற்பாடு நடவடிக்கையாக இந்தத் தடை கடந்த 4 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் சுகாதாரப் பிரிவினால் அமுலுக்கு கொண்டு வரப்பட்டதுஎன்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தடை மேலும் 15

(9 ஆம் பக்கம் பார்க்க)

## 6 வருடகாலத்தில் 1,800 பேர் மிதிவெடிகளால் கால் இழந்தனர்!

### ஐ. நா. அபிவிருத்தி திட்ட அமைப்பு அறிக்கை

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆறு வருடங்களில் ஆயிரத்து 800 பேர் மிதிவெடிகளால் கால்களை இழந்துள்ளனர் என்று ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பின் அறிக்கை தெரிவிக்கிறது.

யாழ். மாவட்டத்தில் மிதிவெடி மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அந்த அமைப்பு மேற்கொண்ட ஆய்விலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

ஐ. நா. அமைப்பின் கண்ணிவெடி அகற்றும் நிபுணர் குழுவினரால் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் கால்களை இழந்த ஆயிரத்து 800 பேரில் ஆயிரத்து 448 பேர் 30 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### தம் மீதான

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை விரைவுபடுத்த மங்கள கோரிக்கை

கொழும்பு, ஜூலை 10

தபால் தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கூடிய விரைவில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும்படி நாடாளுமன்ற சபாநாயகரைக் கேட்டுள்ளார்.

இந்த விவகாரம் ஏற்கனவே நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றது என்பதற்காக, நாடாளுமன்ற விவாதத்தைத் தாம் பின்போட விரும்பவில்லை என்று நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது 'கிரடிற் காட் சலுகைகளை' துஷ்பிரயோகம் செய்துள்ளாரென்ற குற்றச் சாட்டின் பேரில் ஐ. தே. கட்சி அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. தூதுவர் பதவி அநுராவுக்கு கிடைக்கலாம்

### அரசில் சேர்க்க எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 10

ஐ. தே. கவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களின் கண்டனத்துக்கு உள்ளாகி இருக்கும் அநுரா பண்டாரநாயக்க ஐ. நாவின் இலங்கைப் பிரதிநிதியாக நியமிக்கப்படலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

ஜனாதிபதி, பிரதமர், லக்ஷ்மன் ஜெயக்கொடி ஆகியோரே அரசியலில் கண்ணியமானவர்கள் என்று அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்த கருத்தால் அவருக்கு எதிரான குரல் ஐ. தே. க. வட்டாரங்களில் எழுந்துள்ளது.

அநுரா பண்டாரநாயக்கா ஐ. தே. கவில் இருந்து வெளி

(9 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் செயலர் பதவி விலகலாம்!

### இன்று முக்கிய மாநாடு

திருகோணமலை, ஜூலை 10

வடக்கு – கிழக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் சு. டிவகலால தமது பதவியில் இருந்து விலகி மத்திய அமைச்சு ஒன்றுக்கு மாற்றம் பெற்றுச் செல்லவுள்ளதாக மாகாண சபை வட்டாரங்களில் நேற்றுப் பரவலாக பேசப்பட்டது.

கடந்த வாரம் மாகாணக் கல்வியமைச்சு முன்பாக நடந்த உண்ணாவிரதப் போராட்டம், பாடசாலை மாணவர்கள் மீதான தாக்குதல் ஆகியவற்றின் எதிரொலியாக அவர் பதவி விலகிச் செல்லவிருப்பதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில தினங்களாக கொழும்பில் தங்கி நின்ற அவர் நேற்று திருமலைக்கு திரும்பியிருந்தார்.

இன்று காலை 9 மணிக்கு அவர் தமது அமைச்சு அதிகாரிகளுக்கான மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்துள்

(9 ஆம் பக்கம் பார்க்க)

### மாகாண கல்வி அமைச்சு

## ஆலோசகர்களை நீக்க நடவடிக்கை

திருகோணமலை, ஜூலை 10

வடக்கு—கிழக்கு மாகாண சபை கல்வியமைச்சில் பணிபுரியும் 10 ஆலோசகர்களையும் வேலை நீக்கம் செய்ய மாகாண ஆளுநர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவந்தது.

மாகாணக் கல்வியமைச்சில் ஆலோசகர்களாக பணிபுரிபவர்கள் தொடர்பாக ஆளுநர் அலுவலகம் மாகாண சபை பிரதம செயலருடன் தொடர்பு கொண்டுள்ளது.

மாகாணசபை ஆளணி நிலைகளுக்கு புறம்பாக இந்த ஆலோசர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும்—

இவர்களை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவில்லை என்றும்—ஆளுநர் அலுவலகத்துக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## புளுக்குணாவ தாக்குதலில் 11 புலி உறுப்பினர் மரணம்

வவுனியா, ஜூலை 10

மட்டக்களப்பு புளுக்குனாவையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதல் ஒன்றில் தமது தரப்பில் 11 பேர் மரணமானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளதாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மரணமானவர்களின் விவரம்:

★ மேஜர் விக்ரர் அல்லது நற்குணம் (மயில்வாகனம் சிறீஸ்காந்தன் — மட்டக்களப்பு)

★ கப்டன் விந்தன் (அழகையா யோகநாதன் — மட்டக்களப்பு)

(9 ஆம் பக்கம் பார்க்க)

### தலதா மாளிகை தாக்குதல்

## ஆணைக்குழு அறிக்கைக்கு மகாநாயக்கர் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 10

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் குறித்து விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய பலிப்பானே சந்தானந்த தேரர் மீண்டும் நிராகரித்துள்ளார்.

கடந்த வாரம் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில், ஜனவரி மாதம் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலுக்கு கண்டிப் பொலீஸாரின் கவலை

(9 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ்மா அதிபரின்

# கடிதங்கள் போட்டோ பிரதி செய்யப்பட்டது குறித்து விசாரணை

கொழும்பு, ஜூலை 10 பொலீஸ்மா அதிபரின் தனி நபர் கோவையிலுள்ள முக்கிய சில கடிதங்கள் போட்டோ பிரதி எடுக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக இரகசியப்பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவரின் அனுசரணையுடன் பொலீஸ்மா அதிபரின் சேவை நீடிப்புத் தொடர்பான கடிதங்களே போட்டோ பிரதி செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலீஸ் தலைமையகத்தில் உள்ள பொலீஸ் அதிகாரிகளின் வாக்கு மூலங்களை இரகசியப் பொலீஸார் பெற்றுள்ளனர். இ(-10-3)


ஏழாலை
களபாவோடை
அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

## லக்ஷார்ச்சனைப் பூர்த்திப் பெருவிழா
## விஞ்ஞாபனம்

12-7-1998 காலை 10 மணிக்கு 1008 சங்காபிஷேகம்

11. 00 — பூசை
12. 00 — சொற்பொழிவு
1. 00 — சுவாமி வீதி வலம் வருதல்

இணுவில் சிவ ஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் அவர்களின் ஆசியுடன புன்னாலைக்கட்டுவன் சிவ ஸ்ரீ தி.கெங்காதரக் குருக்கள் அவர்கள் பிரதம குருவாக இருந்து மேற்படி விழாவை நடத்தி வைப்பார்.

சொற்பொழிவு: சிவானந்தவாரிதி
சிவத்திரு. வ குமாரசாமி ஐயா

அன்னதானமும் இடம் பெறும்.

வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்.

(57479)



## நன்றி கூறுகின்றோம்

30-06-98 அன்று கொழும்பு - யாழ். விமானப் பயணத்தின் போது எம்மால் தவறவிடப்பட்ட பொதியினை எந்தவித சன்மானமும் எதிர்பாராமல் எமக்கு மீட்டுத்தந்த திரு. புவனேந்திரராசா (மதுசன் வாணிப உரிமையாளர் - உடுப்பிட்டி) அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து அவரது மனிதாபிமானமுள்ள நல் உள்ளத்தினையும் வாழ்த்துகின்றோம்.

நன்றி

தகவல்:
ஆனைக்கோட்டை. (57483) த. உமேஷ்


## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து இராசரத்தினம்

(Retired P. H. I.)

கைதடி வடக்கு இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர் சரவணமுத்து இராசரத்தினம் நேற்று ((9-7-98) காலை 9 மணிக்கு காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், சரவணமுத்து (பிரிவு உதவியாளர், நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி), செல்வராஜேஸ்வரி (கொழும்பு), சரவணபவானந்தன் (Promotors Jaffna), சிறிஸ்கந்தராசா (தொலைத் தொடர்புப் பரிசோதகர், Telecom, கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சித்திரலேகா, சிறீசாந்தன் (Swiss), சாந்தநாயகி, சந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், சசிக்குமார், பிரசன்னா, கேதாரகௌரி, சுமதி பாலமுரளி, பாலநந்தினி, செல்வவினாயகம், கவிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11-7-98 பி. ப. 2 மணிக்கு கைதடி வடக்கு ஊற்றல் மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராசரத்தினம் சரவணமுத்து
(மகன்)

கைதடி வடக்கு,
கைதடி.

(57480)

### அரியகுட்டி சாமுவேல்

(சாம் அண்ணை)

உடுவிலைச் சேர்ந்த அரியகுட்டி சாமுவேல் (9 - 7 - 98) வியாழக்கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி — ஆச்சிக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சாமுவேல் — இரத்தினத்தின் அன்புக் கணவரும், தேவரட்ணம், சிறீதரன், தேவராணி, கனகரட்ணம், பத்மராஜன், இரட்ணராணி, புஸ்பராணி, ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10-7-98) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மருதனார்மடம் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
பத்மன்
(மகன்)
(படப்பிடிப்பாளர்)

மானிப்பாய் வீதி,
உடுவில்.

(57482)


## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

இன்று முதல்
மம்முட்டி - அஞ்சு
சோசி, மஞ்சுளா
விஷ்ணுவரதன் நடித்த

சத்ரிய வம்சம்

தினசரி
10-30 — 2-00. 5-00
(புதிய நேரம்)

(சி/4222)



## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

வெள்ளி, சனி
நாசர் - மாதவி நடித்த
தாய் உள்ளம்

ஞாயிறு, திங்கள்
விஜய் நடித்த
செல்வா

செவ்வாய், புதன்
சிவாஜி நடித்த
பார் மகளே பார்

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)

Tele. No. 070 - 212223

(57309)



## நாகம்ஸ்

சினிமா

சுன்னாகம்.

அகல வெண் திரையில்
10, 11 - 07 - 98 மட்டும்
சினிமா உலகிலேயே
600 கோடி வசூல் பெற்று
சாதனை நாட்டிய படம்

TITANIC

1917 ஆம் ஆண்டு நடந்த உண்மைச் சம்பவம்.

காட்சிகள்:- 10-30, 2-30

(57478)



## பிரத்தியேக வகுப்பு

கணக்கீடு
2000- A/L (காசேடு)
ஆரம்பம்:- 12 - 07 - 98
ஞாயிறு பி. ப. 2.30 மணி.
(பழைய நேரம்)

By:- திரு. நித்தி B.B.A.

இடம்:
தலங்காவல் பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

(சி/4238)


# வேடுவன்கண்டி குளம் திருத்தப்படுகிறது

வலி. தென்மேற்கு, ஜூலை 10 நவாலி விவசாயிகள் சம்மேளனத்தினால் வேடுவண்கண்டி குளம் திருத்தப்பட்டு வருகின்றது.

இதன் வேலைத்திட்டம் பூர்த்தியடைந்ததும்- அப்பகுதியில் பெரும் போக நெற்செய்கை மேற்கொள்ளும் 175 -க்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள் நன்மையடையும் என்று சம்மேளனத்தலைவர் மா.செல்வராஜா தெரிவித்தார்.

இதேவேளை வேடுவண்கண்டி குளத்துடன் இணைந்த வாய்க்கால் திருத்த வேலைகள் உலக உணவு நிறுவன உதவியுடன் விரைவில் திருத்தப்படவுள்ளன.

இத் திருத்த வேலைகளில் ஈடுபடவுள்ளோருக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்படும். வேலை செய்ய விருப்பம் உள்ளோர் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருடன் தொடர்பு கொண்டு பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-185)

## குடி தண்ணீர் விநியோக நேரம் மாற்றம்

யாழ். மாநகரசபையினால் தினமும் காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை நடந்தப்பட்டு வந்த குடி தண்ணீர் விநியோகம் எதிர்வரும் 14 ஆம் திகதியில் இருந்து 6. 30 மணி முதல் 8 30 மணி வரை மேற்கொள்ளப்படும்.

ஜி. ரி. இசட் நிறுவனத்தின் உதவியுடன் குடி தண்ணீர் தாங்கிகள் மூலமே தண்ணீர் வழங்கப்படும்.

மேலும் மாலை நேர தண்ணீர் விநியோகத்தில் மாற்றம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உடற்பயிற்சி இறுதிப் போட்டி

கல்வித்திணைக்களம் வலயம் ஒன்றுக்குட்பட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சி இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வலயம் ஒன்றின் பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அரை இறுதிப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு அதே மைதானத்தில் நடைபெற விருப்பதால் போட்டியில் பங்குபற்றும் அணிகளை காலை 8 மணிக்கே சமுகமளிக்குமாறு உடற்பயிற்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-3)


## புலமைப் பரிசில் 1998

36 ஆவது பயிற்சிப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகள் பெற்றோர்

1. கு. டில்ஷான் உ. ம. க.
2. கா. முகிலன் உ. ம. க.
3. செ. சொபிசன் யா. கொ. இ. ஆ. பா.
4. த. அஜந்தன் யா. இ. ஆ. பா.
5. த. பாலரூபன் கொ. இ. க.
6. யோ. பத்மயோகன்
7. பா. கௌந்திகா யா. இ. ஆ. பா.
8. க. பிரணவரூபன்
9. ஜ. திவ்யன் கொ. இ. ஆ. பா.
10. அ. ஜனனி சு. ஜ. ச. சை. வி.
11. மோ. றஜீவன்
12. ம. டிலாணி உ. ம. க.
13. ம. விமல்ராஜ் யா. இ. ஆ. பா.

அடுத்த பரீட்சை
12 07 - 1998

A/L புள்ளி விவரவியல் பரீட்சை நாளை நடைபெறும்

BOND

(57481) யாழ்.நகர்



அரிய சந்தர்ப்பம் - நழுவ விடாதீர்கள்!

## கொம்ரெக் - சித்தன்கேணி

நிறுவனத்தினால் நடத்தப்படும்

## வெளிவாரி பட்டப்படிப்பு

வடமராட்சியில் இருந்து வருகைதந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம் கலை, வர்த்தக விரிவுரைகளை வழங்குகின்றார்கள்.

இன்றே சேர்ந்து கொள்ளுங்கள்.

05-07-1998 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக உத்தியோகத்தர்,
கொம்ரெக்.

லயன்ஸ் கிளப் அருகில்,
வட்டு. பிரதான வீதி,
சித்தன்கேணி.

(சி/4239)



## கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.

A\L 2000 / 99

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

உயர்கணிதம், இணைந்த கணிதம் — திரு. அம்பிகைபாகன்
பௌதிகவியல் — திரு. கருணாநிதி
இரசாயனவியல் — திரு. பரமேஸ்வரன்
உயிரியல் — பிரபல ஆசிரியர்

பௌதிகவியல் பிரிவு II அடைப்படையிலிருந்து.
ஆரம்பம்;- 11 - 07 - 98

— நிர்வாகி

(சி-4237)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபியோலாவின் எதிர்பாராத மரணம்

# தேசியதுயரம் என்கிறது ராணுவ அரசு

## தொலைக்காட்சியில் அபூபக்கர் அனுதாபம்

அபுஜான், ஜூலை 10

சிறைவைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் மசூட் அபியோலாவின் மறைவு 'தேசிய துயரம்' என நைஜீரிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் அப்துல்சலாம் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

அபியோலாவின் திடீர் மறைவை அடுத்து நாட்டில் உருவாகியிருக்கும் கொந்தளிப்பைத் தணிப்பதற்காக ஜெனரல் அபூக்கர் தேசிய தொலைககாட்சியில் தோன்றி உரையாற்றினார்.

"அளவிட முடியாக துயரில் மூழ்கியுள்ள உங்களிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். எங்களின் இந்த 'தேசியதுக்கம்' சட்டவிரோதமான செயல்களால் அப்பாவி மக்களின் உயிர்களையும், உடைமைகளையும் அழித்துவிடக் கூடாது" என்று தமது உரையில் அபூபக்கர் குறிப்பிட்டார்.



அபூபக்கர்

அபியோலாவின் மரணச் சடங்கு முழு மரியாதைகளுடன் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

ஆனால் சுதந்திரமான பிரேத பரிசோதனைக்காக அபியோலாவின் உடல் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட வேண்டும் என உறவினர்களும், எதிர்க்கட்சியும் கோரி வருவதால் இறுதிச் சடங்கு தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நைஜீரிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் சானி அபாச்சாவும், மசூட் அபியோலாவும் அடுத்தடுத்து ஒரேவிதமான காரணத்தால் மரணமாகியிருப்பது பல ஊகங்களைக் கிளப்பியிருப்பதாக சிலஅவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

ஜெனரல் சானி அபாச்சாவும் மாரடைப்பால் காலமானதாக அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

அபியோலாவின் மரணத்தில் மர்மம் இருப்பதாக வெளியான ஊகங்களை அமெரிக்க அதிபர் கிளின்ரன் மறுத்துள்ளார். (ஐ)

# தொலைக்காட்சியை வீசிவிட உத்தரவு!

## இரு வாரகால அவகாசம்

தொலைக்காட்சிப் பெட்டிகளையும், வீடியோ சாதனங்களையும் வீசிவிடுமாறு ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசு பொதுமக்களுக்கு உத்தரவிட்டிருக்கிறது.

இது தொடர்பான அறிவிப்பை தலிபான் வானொலி விடுத்தது.

மக்கள் தங்கள் தொலைக்காட்சிப்பெட்டிகளையும், வீடியோ உபகரணங்கள் அன்ரனாக்களையும் ரிசீவர்களையும் வீசுவதற்கு இருவாரகால அவகாசம் விதிக்கப்பட்டிருக்கிறது. அவகாசம் முடிந்ததும் படையினர் வீடுவீடாகச் சென்று அவற்றைக் கைப்பற்றி அழித்து விடுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தலிபான் அமைப்பு தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் தொலைக்காட்சி ஒளிபரப்புகளை ஏற்கனவே தடை செய்துள்ளது. இதனால ஆப்கன் மக்கள் தங்கள் வீடுகளில் ஒளித்துவைத்துள்ள சாதனங்கள் மூலம் தொலைக்காட்சி மற்றும் வீடியோக்களை ரகசியமாக இயக்கி வருகின்றனர்.

இந்த எலக்ரோனிக் சாதனங்கள் இஸ்லாத்தின் தத்துவத்தைக் களங்கப்படுத்துவதாகவும், படங்களும், இசையும் தார்மீகச் சீர்கேட்டுக்கு வழி வகுப்பதாகவும் தலிபான் கூறியுள்ளது. (ஐ)

## 3 ஆவது இடத்துக்கான ஆட்டம்

பாரிஸ், ஜூலை 10

உலகக்கிண்ண உதை பந்தாட்ட இறுதி ஆட்டம் ஞாயிறன்று நடைபெறவுள்ளது. அதற்கு முன் மூன்றாம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம் நாளை சனி —இலங்கை நேரப்படி இரவு ஒரு மணிக்கு — நடைபெறவுள்ளது.

# கடாபி விழுந்து இடுப்பில் காயம்!

ரியூனிஸ், ஜூலை 10

லிபிய அதிபர் முஹம்மர் அல்கடாபி (வயது 56) தமது வழமையான உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் தவறி விழுந்து இடுப்பில் காயமடைந்தார்.

இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டதை அடுத்து அவர் உடனடியாக திரிப்போலியில் இருந்து 800கிலோமீற்றர் தொலைவில் உள்ள பேய்டா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சத்திரசிகிச்சை முடிவடைந்தபின் தம்மைப் பார்க்க வந்தோருடன் கடாபி அளவளாவிக்கொண்டிருந்ததை லிபியத் தொலைக்காட்சி வழமையான நிகழ்ச்சிகளை இடைநிறுத்திவிட்டு ஒளிபரப்பியது (ஐ)



கடந்த செவ்வாயன்று நடைபெற்ற இத்தாலி – நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான விறுவிறுப்பான அரையிறுதி ஆட்டத்தை உற்றுக் கவனித்து கொண்டிருந்த ஓர் இத்தாலிய ரசிகை (ஐ)

## இறுதி ஆட்டம் காண உலகம் தயாராகுகிறது!

பாரிஸ், ஜூலை 10

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியைக் காண உலக உதைபந்தாட்ட ரசிகர்கள் தயாராகி வருகின்றனர்.

இலங்கை நேரப்படி ஞாயிறு இரவு ஒரு மணிக்கு ஆட்டம் ஆரம்பமாக உள்ளது.

உலகெங்கும் கோடிக் கணக்கான ரசிகர்கள் இந்த இறுதி ஆட்டத்தை தொலைக்காட்சி மூலம் கண்டு களிக்கவுள்ளனர்.

லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு அன்றைய தினம் தொழில் விடுமுறை வழங்க உலகின் பிரபல தொழில் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

வெற்றி பெறுவது யார் என்ற பந்தயங்களில் ஈடுபடும் ரசிகர் கும்பல்களிடையே முடிவு வெளியானதும் மோதல்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுவதால் பல நகரங்களில் பொலீஸார் விழிப்புடன் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (ஐ)

## பிரான்ஸ் ரசிகர்கள் வெற்றிக் களியாட்டம்!

பாரிஸ், ஜூலை 10

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் விளையாட பிரான்ஸ் அணி தகுதிபெற்றிருப்பது பிரான்ஸ் நாட்டு ரசிகர்கர்களை குதூகலத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த வெற்றியை குறிக்கும் களியாட்டங்கள் நேற்று முழுவதும் நடைபெற்றன. தெருக்களில் ஆடிப்பாடிய ரசிகர்களின் களியாட்டத்தில் பிரான்ஸ் அதிபர் யக்சிராக்கும் கலந்து கொண்டார். பிரெஞ்சுக் கொடியின் வர்ணங்களை முகத்தில் பூசிக்கொண்ட மக்கள் வீதிகளில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ஞாயிறன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் பிறேஸில்— பிரான்ஸ் மோதவுள்ளன. ஐரோப்பிய, தென்னமெரிக்க அணிகள் இப்போட்டியில் மோதுவது இது 7 ஆவது முறையாகும். (ஐ)

# இறுதி ஆட்டத்துக்கு பிறேசில், பிரான்ஸ்!

பாரிஸ், ஜூலை 10

**16 ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் மோத தற்போதைய உலகசம்பியனான பிறேஸில் அணியும், போட்டியை நடத்தி வரும் பிரான்ஸ் அணியும் தகுதி பெற்று விட்டன.**

உலக உதைபந்தாட்ட ரசிகர்களின் தீவிர எதிர்பார்ப்பின் மத்தியில்—

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை— இலங்கை நேரப்படி இரவு ஒரு மணிக்கு— சென். டெனிஸ் (St, Denis) ஸ்ரேடியத்தில் பலம்பொருந்திய இவ்விரு அணிகளும் உலகக் கிண்ணத்தைச் சுவீகரிப்பதற்காக மோதவுள்ளன.

16 ஆவது உலகக் கிண்ணத்தை பிரான்ஸா பிறேஸிலா கைப்பற்றிக்கொள்ளும் என்பது தான்இப்போதுள்ள கேள்வி? 13 ஆம் திகதி அதிகாலை முடிவு தெரிந்து விடும்.

எனினும் இறுதியாட்டத்தில் மோதிக் கொள்ளும் அணிகள் இரண்டும் பலம் பொருந்தியதாக இருப்பதால் ஆட்டம் மிக விறுவிறுப்பாக இருக்கும்.

இரு அணிகளினதும் பலத்தை ஒப்பிட்டால் பிரான்ஸே முன்னணியில் உள்ளது.

இம்முறை போட்டித் தொடரில் விளையாடிய ஆறு ஆட்டங்களிலும் ஒன்றில் கூட பிரான்ஸ் அணி தோல்வியடையவில்லை. ஆனால் பிறேஸில் அணி தான் ஆடிய ஆறு ஆட்டங்களில் ஐந்தில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. நோர்வேயுடனான போட்டியில் நோர்வேயிடம் 2-1 என்ற கோல் கணக்கில் பிறேஸில் தோல்வி அடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. எனினும் 16 ஆவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரைப் பொறுத்தவரை பலம் வாய்ந்த அணிகள் என்று கருத்தப்பட்ட அணிகளுள் பல கடைசி நேரத்தில் எதிர்பாராத விதமாகத் தோல்வியடைந்தமை இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆகவே எந்த அணி வெல்லும் என்பது முன்னரே ஊகிக்க முடியாத ஒன்றுதான். (ஐ-6)

# பிரான்ஸ் குரோஷியாவை வென்றது!

பாரிஸ், ஜூலை 10

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் புதன் இரவு நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் குஹோஷியாவை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இவ்வாட்டத்தில் ஆட்டம் ஆரம்பித்து இடைவேளைவரை இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்கவில்லை. இந்த நேரத்தினுள் குறோஷியர்கள் தமக்குக் கிடைத்த வாய்ப்பொன்றை கோலாக்கத் தவறி விட்டனர்.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமான 29 ஆவது செக்கனில் குறோஷிய வீரர்கள் மின்னல் வேகத்தில் பந்தைக் கடத்திச் சென்று தமது முதலாவது கோலினைப் போட்டனர்.

எனினும் தடுமாற்றம் கொள்ளாத பிரான்ஸ் அணி பின்னர் குரோஷியா கோல் அடித்து சரியாக ஒரு நிமிடத்தின் பின் தமது முதலாவது கோலைப் போட்டு கோல் எண்ணிக்கையை சமன் செய்தனர்.

தொடர்ந்து சளைக்காமல் ஆடிய இரு அணியினரும் அடுத்த 20 நிமிடங்களுக்குள் கோல் எதனையும் போடவில்லை. இடைவேளையின் பின்னரான 25 ஆவது நிமிடத்தில் முன்னர் கோல் அடித்த பிரான்ஸ் நாட்டின் அதே வீரர் மீண்டும் ஒரு கோலினை அடித்து 2-1 என்ற கோல் கணக்கை ஏற்படுத்தினார்.




### பிரான்ஸ் வீரர் வெளியேற்றம்

பிரான்ஸ் இரண்டாவது கோலினை அடித்து 5 நிமிடங்களின் பின்னர் பிரான்ஸ் நாட்டு வீரர் ஒருவர் எதிரணி வீரருக்கு பேராபத்து விளைவிக்கக் கூடிய வகையில் விளையாடியதனால் நடுவரால் வெளியேற்றப்பட்டார்.

இதனால் ஏனைய 15 நிமிட நேரத்துக்கும் பிரான்ஸ் 10 வீரர்களுடனேயே விளையாட வேண்டி இருந்தது. இந்நிலையில் ஆட்டத்தின் 42 ஆவது நிமிடத்தில் குறோஷியர்கள் தமக்குக் கிடைத்த இலகுவான வாய்ப்பொன்றை நழுவவிட்டதன் காரணமாக பிரான்ஸ் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பிறேஸில் நெதர்லாந்தை 4-2 என்ற கோல் கணக்கில் வென்று இறுதியாட்டத்துக்கு ஏற்கனவே தகுதி பெற்றுள்ளது. (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், அலுவலக மேசை, கண்ணாடி அலுமாரி, கட்டில், சோக்கேஸ்கள், குசன் செற்றி, கதிரைகள், மின்சார உபகரணங்கள், பனசொனிக் XBS கசட் றேடியோ (50W) மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. பாலா, நுணாவில் கல்வயல் வீதி, 2 ஆம் ஒழுங்கை பாலர் பாடசாலை அருகில், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. [சி/4280]

### ஆங்கிலக்கல்வி

சிறு குறுப்பாக ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, கதைக்க பயிற்சி கொடுத்து சிறந்த மாணவர்களை உருவாக்குவதே எமது நோக்கம். ஆசிரியர்: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, ஆங்கிலக் கல்வி நிலையம், 426, (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [57444]

### உடன் விற்பனைக்கு

ஒருநாள் பிறிமா பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. எம்மிடம் பதிவு செய்தவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும். 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [57524]

### வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தியில் (Campus Junction) தனிக் கிணறு, மூன்று பரப்புக் காணியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 535 A பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். [57442]

மணல் தறை கந்தர்மடத்தில் நல்ல சூழலில் நல்ல தண்ணீர், வாகன தரிப்பிட வசதியுடன் சோதிட முறைப்படி அமைந்த நல்ல வீடும், அதனுடன் வீடுகட்டக்கூடிய காணித்துண்டும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி லிங்கரதுரைராஜா, 19 பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர். [57449]

### கலர் மீன்கள்

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய இன கலர்மீன்கள் விற்பனைக்கு உண்டு. A. அருளானந்தம், இல. 588/8, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை), நண்பகல் 12 மணியிலிருந்து பார்வையிடலாம். [57418]

### தவறிவிட்டது

தம்பிராஜா சந்தானலட்சுமி என்பவருடைய தேசிய அடையாள (677620293V) அட்டையும், விசேட அடையாள அட்டையும் நாவற்குழிக்கும், நல்லூர்ப் பகுதிக்கும் இடையில கடந்த 5-7-98 அன்று தவறிவிட்டன; கண்டெடுப்பவர்கள் இல. 3, செம்மணி வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [57468]

### காணவில்லை

துரைராசா ராசன் என்பவரின் கால்நடை (4 வருட நாம்பன்) இதில் குறி J S. என்னும் எழுத்து பொறிக்கப்பட்டுள்ளது. இதன் நிறம் மயிலை. சில நாள்களாகக் காணவில்லை. இது பற்றிய தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: தலைவர் கடை, மலர்மகள் வீதி, அரியாலை. [57463]

### தேவை

கேற், கிறில் வேலைகள் செய்யத் தெரிந்த எலக்ரிக் வெல்டர் மற்றும் தொழில் கல்வி பயின்ற பயிலுனர் தேவை. நேரில் வரவும். R.S. நுண்பட்டறை, 109, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [57441]

தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்களும் O/L — ற்கு தமிழ் கற்பிக்கக்கூடிய ஆசிரியையும் தேவை, தொடர்பு: Casio Institute, 3ஆம் கட்டை, கல்வியங்காடு. [57458]

---

## நல்லூர் தூரிகையில்

இன்று முதல் மூன்று நாள்களுக்கு

மாபெரும் மனைப்பொருள் கலைகள் சார்ந்த

## கண் காட்சி

- ★ தையல், செயற்கை மலர்கள்
- ★ கேக் அலங்காரம், முடிபலங்காரம்
- ★ துணி அலங்காரம், மனங்கவர்சித்திரங்கள்
- ★ இன்னும் பற்பல அம்சங்கள்

இடம்: தூரிகை சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகள்

காலை முதல் மாலை வரை

அனைவரும் வாரீர்!

– மாணவிகள்

(சி/ 4234)

---

## திருவாசக விழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபை

இடம்: இணுவில் கிழக்கு அம்மா அச்சக அண்மையில்

காலம்: 12 – 07 – 98 ஞாயிறு காலை 9–30 மணி (புதிய நேரம்)

தலைவர்: மன்னவன் மு. கந்தப்பு

சிறப்புரைகள்;

i ''நாட்டார் இலக்கியமும் திருவாசகமும்''
கலாநிதி எஸ். சிவலிங்கராசா
சிரேஷ்ட விரிவுரையாளர் (தமிழ்ப் பிரிவு) யாழ். பல்கலைக்கழகம்.

ii ''முல்லைப்பாணியும் திருவாசகமும்''
திரு. நா. வி. மு. நவரத்தினம், M. Mus. Phil.
சிரேஷ்ட இசை விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைப் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்

திருவாசகம்-ஓதுதல்; சங்கீத ஆசிரியைகள்
திருமதி யோகேஸ்வரி சிவலிங்கம்
திருமதி மகாலட்சுமி ஜெயநாதன்

பொ. பாலகுமார்
பொதுச் செயலாளர்

(57450

---

## விலை மாற்றம்

காவேரி மிளகாய்த்தூள்

தயாரிப்பதற்குரிய மூலப் பொருள்கள் விலை உயர்வால் எமது காவேரி மிளகாய்த்தூள் 01 – 10 – 98 முதல் 1 கிலோவுக்கு 10 ரூபா விலை உயர்த்தி உள்ளோம்.

காவேரியின் தரம் நிரந்தரம்!

(57470)

---

## A/L 98 ஓகஸ்ட் பரீட்சை எடுக்கும்

மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் தொடர்பான

## இலவச கருத்தரங்கு

பரீட்சை எடுக்கும் அனைத்து மாணவர்களும் கருத்தரங்கில் பங்குபற்றலாம்.

பாடங்கள்: தமிழ், இந்து நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், நாடகம், அளவையியல், இந்துசமயம், புவியியல், அரசியல்.

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முதல் கருத்தரங்கு தமிழ் 11 – 07 – 98 காலை 8-30 மணி

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (57474)

---

# தமிழ் இலக்கிய விழா

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படும் தமிழ் இலக்கிய விழா அடுத்த மாதம் 28, 29, 30 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.


இவ்விழாவில் நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம் ஆகிய பிரிவுகளில் சிறந்த எழுத்தாளர்களுக்கு சாகித்திய மண்டலப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை இவ்விழாவில் கலந்துகொள்ள தமிழ் நாட்டின் பிரபல தமிழ்ப்பேராசிரியர்கள் மூவர் திருமலை வரவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் அன்றைய தினம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### சிறிஸ்கந்தராசா கோபிகன்

[முன்னாள் மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி]

மலர்வு 08 - 09 - 1982

உதிர்வு 10 - 07 - 1995

எங்கள் குடும்பத்தில் ஒளி வீசிய வெண்மதியை!
எங்கள் வானத்தின் ஒப்பற்ற இளம்பிறையை!
முழுநிலவாய் விரியுமுன்னே பறித்தது ஏன்
ஆண்டவனே!

- குடும்பத்தினர்

உபதபாலகம்,
உடுவில்.

[சி/ 4235]

---

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தாயின் மடியில் 10-08-1914

இறைவன் அடியில் 24-06-1998

அமரர்

### குழந்தைவேலு ராதா

(தவில் வித்துவான்)

எங்கள் குடும்பத் தலைவனாய்
அன்பின் திருவுருவாய்
பண்பு, பாசத்தின் இருப்பிடமாய்
உற்றாரும் சுற்றத்தாரும்
போற்றிட வாழ்ந்தவரே!
நோயின் பிடியில் சிக்கி
காலன் கண்ணிற் பட்டு எமையெல்லாம்
விட்டுச் சென்றனையோ!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரமக்கள், உறவினர்,
சுற்றத்தார்

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(57472)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரமற்ற அரிசி விநியோகத்தால் மக்களிடம் நாமே குறை கேட்கிறோம்

## ப. நோ. கூ. சங்க களஞ்சியப் பொறுப்பாளர்

அரியாலை, ஜூலை 10

நிவாரணமாக வழங்கப்படும் உணவுப் பொருள்கள் தரக்குறைவாக இருப்பதால் பல நோக்குக் கூட்டுறவு சங்கமும் பொது மக்களிடம் குறைகேட்க நேரிடுகிறது. ஆனால் புனர்வாழ்வுப் பகுதியினர் எமக்குத் தரும் உணவுப் பொருள்களையே நாம் விநியோகிக்கிறோம். சென்ற தடவை புனர்வாழ்வுப் பகுதியினர் வழங்கிய கோறா அரிசியையே நாம் விநியோகிக்கிறோம்.

இவ்வாறு யாழ். பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் சி. திருநாவுக்கரசு கவலை தெரிவித்தார்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நிவாரண உணவுப் பொருள்களை வழங்குதல் மற்றும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் நிறை அளவுகள் குறித்து ஆராய்வதற்கான கிளை முகாமையாளர்களுக்கான கூட்டம் நடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சங்கத்தில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தலைமை வகித்தார்.

களஞ்சியப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:

பல நோக்கு கூட்டுறவு சங்கங்களினூடாக வழங்கப்படும் நிவாரணப் பொருள்களை புனர்வாழ்வுப் பகுதியினரே எமக்கு வழங்குகின்றார்கள்.

அவை தரம் குறைந்தவையாக இருப்பதால் பொதுமக்கள் எங்கள் மீதே — சங்கங்கள் மீதே — குறைகாண்கின்றனர். இந்த நிலை எமது சங்கத்தின் மதிப்பைக் குறைப்பதாகவே உள்ளது. இந்தக் கவலைக்குரிய நிலை நீக்கப்பட வேண்டும்.

சென்ற முறை வழங்கப்பட்ட கோறா அரிசி வண்டரித்த நிலையில் இருந்தது. ஆனால் இது குறித்து எம்மால் எதுவும் செய்ய முடியாத நிலை உள்ளது என்றார்.

சங்கத் தலைவர் தமது உரையில் தெரிவித்ததாவது:-

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருள்களில் நிறை அளவுகள் குறைவாக காணப்படுவதாக பல புகார்கள் கிடைத்துள்ளன.

நிவாரணப் பொருள்களை மக்களுக்கு விநியோகிப்பதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஓர் ஊடகமாகவே செயற்படுகின்றன.

போர்க்கால சூழ்நிலைகளில் இடம்பெயர்ந்து பெரும் துன்பங்களை அனுபவித்து, வேலை வாய்ப்பு, சுய தொழில் முயற்சிகள் எதுவும் இன்றி நிவாரணத்தையே நம்பி வாழும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருள்களில் நிறை அளவுகளை குறைத்து வழங்குவது கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும்.

நிவாரணப் பொருள்கள் சரியாக மக்களை சென்றடைவதற்கு கிளை முகாமையாளர்கள், சங்க நிர்வாகிகள், கிளைக்குழுக்கள் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும்.

நிவாரணப் பொருள்கள், ரொக்கப் பொருள்கள் சரியாக மக்களுக்கு விளங்கும் வண்ணம் சிட்டையில் நிறை, விலை என்பனவற்றைக் குறிப்பிடவேண்டும் — என்றார்.

கூட்டத்தில் உபதலைவர் பெஞ்சமின் ஜேக்கப், இயக்குநர் சபை உறுப்பினர்களான எஸ். ரி. கணநாதன், சபா. தியாகராசா, குணநாயகம் மற்றும் சங்க அதிகாரிகள், கிளை முகாமையாளர்கள், விற்பனையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-17)

# மாட்டு வண்டியில் குழந்தை பிரசவம்!

நெல்லியடி, ஜூலை 10

பிரசவத்துக்காக மாட்டு வண்டியில் மருத்துவமனைக்கு வந்த கர்ப்பிணித்தாய் வழியில் மாட்டு வண்டியிலேயே பெண் குழந்தையொன்றைப் பிரசவித்தார்

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை காலை 5 மணியளவில் மந்திகையில் இடம்பெற்றது.

துன்னாலை குடவத்தையைச் சேர்ந்த சந்திரசேகரம் ராஜேஸ்வரி (வயது 21) என்ற கர்ப்பிணியே குழந்தையைப் பிரசவித்தவராவார்.

மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்ட தாயும், சேயும் கடமையிலிருந்த டாக்டர், ஊழியரா முதலுதவி அளிக்கப்பட்ட பின்னர் பிரசவ விடுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஐ-109)

# ஆனைக்கோட்டை பகுதியில் ஒருவர் பலி

ஆனைக்கோட்டைப் பகுதியில் செவ்வாய் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமானதாக ஒருவரின் சடலம் புதன் அதிகாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை சாவற்காட்டைச் சேர்ந்த வைத்தி அரிச்சந்திரன் (வயது 50) என்பவரே உயிரிழந்தவராவார்.

# தொலைக் கல்வி பரீட்சை முடிவுகளை வெளியிட இ.த.ஆ. சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 10

தொலைக் கல்விப்பிரிவின் பகுதி 1, பகுதி 2 பரீட்சை முடிவுகளை உடன் வெளியிட வேண்டும்' என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

தேசியகல்வி நிறுவனத்தின் தொலைக் கல்விப் பிரிவு பணிப்பாளர் கலாநிதி திருமதி எச். பள்ளியக்காராவிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் சி. குமரகுருதாசன், நிர்வாகச் செயலாளர் சி. சரவணபவானந்தன், சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், நிதிச் செயலாளர் ஜே. யேசுதாசன், யாழ். மாவட்டச் செயலாளர் ரி. ஸ்ரீ காந்தன் ஆகியோர் கொண்ட தூதுக்குழு பள்ளியக்காராவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

இப்பேச்சின் போது கலந்துரையாடிய முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ தொலைக் கல்விப் பிரிவின் பகுதி 1, பகுதி 2 பரீட்சைக்குத்தோற்றியவர்களின் முடிவுகள் இதுவரை வெளியிடாததால் அவர்கள் சம்பளத்தையும், சம்பளப்பாக்கியையும் பெறமுடியாது உள்ளனர். அவர்களது முடிவுகளை வெளியிட வேண்டும்.

★ தொடர் கல்வி பயிற்சிக்குரிய மொடியூல்கள் இன்னமும் வடக்குக்கு வந்து சேரவில்லை. இதனால் பயிற்சியைத் தொடரும் ஆசிரியர்கள் பெரிதும் சஷ்டப்படுகிறார்கள். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இன்னமும் கிடைக்கவில்லை. இந்த மொடியூல்கள் கடந்த ஜனவரி மாதம் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அதன் அசமந்தப்போக்கால் அவை உரிய இடங்களுக்கு அனுப்பப்படவில்லை.

★ புதுக்குடியிருப்பு தொலைக் கல்வி நிலையம் மூலம் ஆங்கில பாடப்பயிற்சி பெற்ற ஏழு ஆசிரியர்கள் இறுதிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்காததால், பரீட்சைக்கு அவர்கள் தோற்ற முடியாது போனார்கள். அவர்கள் பிறிதொரு தினத்தில் பரீட்சைக்குத்தோற்ற அனுமதிக்க வேண்டும்.

★ வடக்கு — கிழக்குக்கு தேசிய கல்வி நிறுவன இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் (இ-3)

# கொல்களம் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு

வலிகாமம் தெற்கு, ஜூலை 10

உடுவில் மல்வம் பகுதியில் அமைந்துள்ள கொல்களம் பகுதியில் உரிய சுகாதார விதிகள் பேணப்படாமையால் சுற்றாடலில் சுத்தம், சுகாதாரம் பாதிப்படைவதாக பொது மக்கள் குறைகூறுகின்றனர்.

உடுவில் பொதுச் சுகாதார பரிசோதகர் பகுதிக்குட்பட்ட இக் கொல்களத்தில் வைத்து வெட்டப்படும் ஆடு, மாடு போன்றவற்றின் கழிவுகள் உரிய முறையில வெட்டித் தாழ்க்கப்படாமையால் அவற்றை காகங்கள், நாய்கள் போன்றன கிளறி எடுத்துச்செல்கின்றன. இவற்றால் அப்பகுதியில் துர் நாற்றம் வீசுவதாகவும், அதனால் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இதேபோன்று, தாவடியில் அமைந்துள்ள மயானப்பகுதியில் கள்ளமாக ஆடு, மாடு வெட்டுபவர்கள் அவற்றின் கழிவுகளை இரவு நேரத்தில் கொண்டு வந்து போட்டு விடுவதனால் தாவடி மயானப் பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதியில் வாழும் மக்கள் முறைப்பாடு தொவித்துள்ளனர்.

பொதுச்சுகாதார பரிசோதகர்களும், கொல்களத்திற்கு பொறுப்பாக உள்ள பிரதேச சபையினரும் இவற்றுக்குத் தேவையான உரிய நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும் எனவும் அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். (ஐ-152)

## உலர் உணவு விநியோகம்

# சிறிய பைக்கற்றுகளில் அரிசியின் மாதிரிகள்

## செயலகம் அனுப்பும்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும், ப. நோ. கூ. சங்கங்களுக்கும் உலர் உணவு நிவாரணத்தின் போது வழங்கப்படும் அரிசியின் மாதிரிகளை பைக்கற்றுக்களில அனுப்பி வைக்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் ஆலோசித்து வருகின்றனர்.

உலர் உணவு நிவாரணத்தின் போது வழங்கப்படும் அரிசி தரமற்றவையாக இருப்பதாகப் பொதுமக்கள் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து இந்த அரிசி விநியோகம் பற்றி அண்மையில் ஆராயப்பட்டது.

தமது களஞ்சியத்திலிருந்து தரமான அரிசியைத்தான தாம் ப. நோ. கூ. சங்கத்திற்கு வழங்கியதாக யாழ். செயலகமும், செயலகம் வழங்கிய அரிசியையே மக்களுக்கு விநியோகிப்பதாக ப. நோ. கூ. சங்கமும் தெரிவித்து வந்தன.

இதனால தரங் குறைந்த அரிசி விநியோகம் பற்றி கண்டுபிடிக்க முடியாமலிருந்தது. தரமற்ற அரிசி விநியோகத்தைத் தடுக்கும் நடவடிக்கையாகவே விநியோகத்தின் போது மாதிரி அரிசி பைக்கற்றுட்டுக்களை பார்வைக்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது. (ஐ-5-7)

# நகுலேஸ்வரர் ஆலயம் விரைவில் புனரமைப்பு

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த ஆலயப் புனரமைப்புக்கு முதற்கட்டமாக 40 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய புனரமைப்புச் சபை இத ஆலயத்துக்கு ஏற்பட்டுள்ள சேத மதிப்பீட்டு விவரம் ஒன்றைத் தயாரித்து வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையிடம் சமர்ப்பித்திருந்ததுடன் இந்த ஆலய புனரமைப்புக்கு உதவுமாறும் கேட்டிருந்தது.

புனரமைப்புச் சபையின் வேண்டுகோளுக்கிணங்க முதற்கட்டமாக வடக்கு மீள் குடியேற்ற அதிகார சபை இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை போரினால் சேதமடைந்துள்ள மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் புனரமைப்புக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# திருநெல்வேலிப் பகுதி மின் விநியோகம் தடை

திருநெல்வேலி வடக்கு, கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளுக்கான மின்விநியோகம் கடந்த ஒரு வாரமாக துண்டிக்கப்பட்டிருப்பதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அடுத்தமாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும், இப்பகுதிகளில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களும் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டதால் தமது கல்வியைத் தொடர முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மின்விநியோகம் துண்டிக்கப்படுவதற்கு முன்பும் நாளொன்றுக்கு இருமணி நேரமே இப்பகுதி மின்விநியோகம் இடம்பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## வலி. வடக்கில்

# ஆள்களற்ற வீடுகளில் தொடர்ந்து திருட்டு

சுன்னாகம், ஜூலை 10

வலிகாமம் வடக்குப் பகுதியில் மக்கள் மீளக் குடியமராத பிரதேசத்திலுள்ள வீடுகளிலும், ஆள்களற்ற வீடுகளிலும் திருட்டில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தெரிவித்தார்.

ஆள்களற்ற வீடுகளில் புகுந்து கதவு, யன்னல் மற்றும் பொருள்களைத் திருடுவதும், விறகுக்காக மரங்கள் அனுமதியின்றி திருட்டுத்தனமாக தறிக்கப்படுவதும் இப்பகுதியில் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து திருட்டில் ஈடுபடுபவர்கள் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களது நிவாரணத்தை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுளளார்.

இதேவேளை —

அண்மையில் இவ்வாறு திருட்டில் ஈடுபட்ட சிலர் கிராம அலுவலர்களால் பிடிக்கப்பட்டு, திருட்டுப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டதோடு அவர்களுக்கான நிவாரணமும் இடை நிறுததப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

# கட்டணம்செலுத்தாவிடின் மின்சாரம் துண்டிப்பு

திருநெல்வேலி, ஜூலை 10

மின்சாரக் கட்டணத்தை நீண்ட காலமாகச் செலுத்தாமலிருக்கும் வீடுகளுக்கான மின் விநியோகம் இலங்கை மின்சார சபையினரால் துண்டிக்கப்பட்டு வருகின்றது.

யாழ். நகரில் மூன்று மாத காலத்திற்கு மேல் தமது மின் கட்டணத்தைச் செலுத்தாமல் இருப்பவர்களின வீடுகளுக்கான மின்சார விநியோகமே தற்போது நிறுததப்பட்டு வருவதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ - 135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - கிழக்கு மாகாண
## தமிழ் இலக்கிய விழா 1998

மேற்படி விழா திருகோணமலையில் ஒகஸ்ட் மாதம் 28 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் இடம் பெறும்.

ஆராய்ச்சிப் பொருளாக
**"தமிழ் ஒரு நிர்வாக மொழியாக"**
என்ற விடயம் அமையும்.

இதில் பேராளர்களாகக் கலந்து கொள்ள விரும்புவோரை எங்களுடன் 31-07-98 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட, உணவு வசதிகள் எங்களால் வழங்கப்படும்.

**சுந்தரம் டிவகலாலா,**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
30—06—98

(சி/4226)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 20 |
| 02 | 06 |
| 1919 | 1989 |

**திருமதி இராசம்மா சுப்பிரமணியம்**
(பூமணி)
திதி; **10 — 07 — 1998**

காலம் எல்லாம் எங்களுக்கு நல்வழிகாட்டி இப்பாரினில் எம்மை உயர்ந்த நிலைக்கு ஆளாக்கிய அன்னைக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'கணேசபவனம்'
தாவடி தெற்கு.
கொக்குவில்.

'விமலஸ்தான்'
இணுவில் மேற்கு.
இணுவில்.

3 B, அரசினர் -
மாடி வீடுகள்,
கொழும்பு 4.

(57384)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 27 | 15 |
| 07 | 06 |
| 1956 | 1992 |

**திருமதி அரியமலர் சுந்தரலிங்கம்**
திதி: 10-7-98

அகல் விளக்கேற்றி வைத்து
அணையாத தீபமாகி
அமரனை நாடிவிட்ட
அரியமாம் மலருக்கோர்
அர்ப்பணம் எதைத்தான்
செய்வோம்!
நான்பெற்ற செல்வம் செல்லம்
ஆறாத கவலை அம்மா!

உன்னுடைய ஆத்மாசாந்திஅடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, அண்ணா குடும்பம்,
தம்பி ரூபன்.

பொன்னையா சின்னம்மா.
சாந்தவளவு,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(57385)

## பிரெஞ்சு தூதுவர் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். மாவட்ட நிலைமையை நேரில் பார்வையிடும் பொருட்டு இலங்கைக்கான பிரெஞ்சுத் தூதுவர் எலிச பெத் டகான் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

யாழ். செயலகத்துக்கு வருகை தந்த இவர் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் உட்பட அரச திணைக்களத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

யாழ். ஆயர் இல்லத்துக்குச் சென்று ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தைச் சந்தித்து யாழ். நிலைவரம் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டதுடன் இராணுவ அதிகாரிகளையும் அவர் சந்தித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5-7)

## திருமலையில் வீதி மறியல் போராட்டம்

கடந்த ஏழு மாத காலம் நிவாரணம் கிடைக்காமையைக் கண்டித்து திருகோணமலை மாவட்டம் கப்பல் துறை கிராம மக்கள் நேற்று முன்தினம் வீதி மறியல் போராட்டத்தில் குதித்தனர்

திருமலைப் பட்டணமும், சூழலும் பிரதேச செயலர் அலுவலகம் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

பிரதேச செயலர் அளித்த உறுதிமொழியை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது. (இ-3)

## புதிய குருமனை அமைக்கப்படும்

பருத்தித்துறை பங்குக்கென புதிய குருமனை ஒன்று 12 இலட்சம் ரூபா செலவில் கட்டப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை பருத்தித்துறை பங்குக் குரவர் அருள் திரு. பி. எம். இம்மானுவேல் அண்மையில் நாட்டி வைத்தார்.

பருத்தித்துறை புனித தோமையார் ஆலய வளவில் புதிய குருமனை அமையவுள்ளது. (ஐ-173)

## நெடுந்தீவில் உதவிப்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை10

நெடுந்தீவு தபாலக பிரதேசத்தில் மாதாந்த உதவிப் பணம், காசநோயாளருக்கான உதவிப்பணம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவு எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வழங்கப்படுமெனவும்—

கொடுப்பனவுகளைத் தாமதியாது பெற்றுக் கொள்ளுமாறும்—நெடுந்தீவு பிரதம தபாலதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-ரி)

## தொடர்பு கொள்ளவும்

ஈழத்துஎழுத்தாளர்கள், யாழ். பல்கலைக்கழகம், ஏனைய நிறுவனங்களின் வெளியீடுகள் பாடசாலை உப பாட நூல்கள், பரீட்சை வினா - விடைகள் விற்பனைக்கு முதலிடம் அளிக்கவிருப்பதால் மேற்படி நூல்களை விற்பனை செய்ய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்!

**லக்சுமி**
**புத்தக நிலையம்**
இல. 312 (A),
காங்கேசன் துறைவீதி
யாழ்ப்பாணம்.

(சி/4221)

## குடத்தனை ஞானவயிரவப் பெருமான்
## வருடாந்தப் பொங்கல் உற்சவம்

**பக்த அடியார்களே!**

கரவெட்டியார் தோட்டத்தில் அமைந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ வயிரவப் பெருமான், ஸ்ரீ வீரபத்திர சுவாமிகளின் வருடாந்தப் பொங்கல் வெள்ளிக்கிழமை **10—7—98** இரவு பண்டம் எடுக்கப்பட்டு **11—7—98** சனிக்கிழமை பொங்கல் அன்னதானம் நடைபெறும். அத்தருணம் அடியார்கள் வருகை தந்து, காவற் தெய்வமாகிய வயிரவப் பெருமான் அருள் பெற்று ஏகுமாறு அன்புடன் அறியத்தருகிறோம்.

தெய்வம் உண்டென்று இரு !
நன்றி.

இளவரசி வெதுப்பகம்
" ஐடியல் "
நெல்லியடி.

பூசகர் சார்பாக
குறள் வழி வள்ளல்
மா. கனகராசா

(C / 4220)

## பதவி வெற்றிடம்

**தட்டெழுத்து - சுருக்கெழுத்து**
**போதனாசிரியர்**

ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் போதனாசிரியருக்கு தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்

1. ஆங்கில, தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பாடங்களில் தேர்ச்சியும், அனுபவமும் இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி இரு மொழிகளிலும் கற்பிக்கும் ஆற்றல் கொண்டவராக இருத்தல வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20-07-1998-க்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
அறவழிப் போராட்டக் குழு,
29, கண்டி வீதி.
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி

**NVDAG**

(57460)

## முக்கிய அறிவித்தல்

**கூட்டுறவுச் சங்கங்கள் சட்டவிதி — பிரிவு 18 (1)ன் கீழ் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்**

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்
**1998 - 07 - 12**

சுப்பையா கணேசமூர்த்தி தலைமை அலுவலகக் கூட்டுறவுப் பரிசோதகராகிய எனக்கு யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் 1998 - 06 - 26 திகதியிட்ட யா/கூ/அ/1639 இலக்க கடித மூலம் கூட்டுறவுச்சங்க சட்டவிதி 18 (1) ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சி நிரலைக் கொண்ட யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று என்னால் அழைக்கப்படுகிறது. தங்களை இக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். கூட்டம் எனது தலைமையில் நடைபெறும்.

இடம்: பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
நாள்: 1998 - 07 - 12 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி (புதிய நேரம்)

**நிகழ்ச்சி நிரல்**

1. மௌன இறைவணக்கம்
2. தலைமை உரை
3. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரை
4. புதிய நெறியாளர் குழு உறுப்பினர் தெரிவு
5. நன்றியுரை

**சு. கணேசமூர்த்தி**
தலைமை அலுவலகப் பரிசோதகர்

கூட்டுறவு அலுவலகம்,
18/10, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
1998 - 07 - 09

குறிப்பு:-
1) இக்கூட்ட அழைப்புக் கடிதம் தனித்தனி உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
2) **1997 - 07 - 12** ஆம் திகதி வரை சங்கத்தின் உறுப்புரிமை பெற்று முழுப்பங்கின் பெறுமதியான நூறு ரூபாவை செலுத்தியவர்கள் மட்டும் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடையவர் ஆவர்.

(சி/4223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சிபார்சும் அர்த்தமும்

இலங்கை அரசியலில் பௌத்த மகா சங்கத்தின் செல்வாக்கு எப்போதுமே குறைந்ததில்லை. சில வேளைகளில், இலங்கையில் ஆட்சிவிவகாரங்களை மகா சங்கத்தினரே நடத்தி வருகின்றார்களோ என்று கருதுமளவுக்கு பௌத்த பிக்குகளின் செல்வாக்கு மேலோங்கி நிற்பதுண்டு.

இதனால் ஆளும் கட்சியாக இருப்பினும் சரி, எதிர்க்கட்சியாக இருப்பினும்சரிஅவற்றின் தலைவர்கள் மகா சங்கத்தினரின் ஆலோசனைகளைக் கேட்பதற்கும் அவர்களின் பின்னால் செல்வதற்கும் தயங்குவதில்லை. இது ஒரு மரபு முறையாகியும் விட்டது; உலகம் அறிந்த ஒன்றும் கூட.

வடக்கு – கிழக்கில் நடக்கும் போரை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த வெற்றிகரமாகமுடித்தாராயின் அவர் பிரதமர் பதவிக்குத் தகுதி பெறுவார் — என்று மல்வத்த மகாநாயக்க தேரர் வண. ரம்புக்வல ஸ்ரீ விபாசி தேரர் தெரிவித்துள்ள கருத்து மகா சங்கம் அரசாட்சியில் எந்தளவுக்குப் பங்கு கொண்டுள்ளது என்பதற்கு ஓர் உதாரணமாகும்.

எப்படியாவது பிரதமர் பதவியைப் பிடிக்க வேண்டும் என்பது அமைச்சர் அனுருத்தவின் ஆசை; ஜனாதிபதி சந்திரிகாவும் இதற்கு ஆதரவு. ஆனால் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தமது பதவி அனுருத்தவின் கைக்குப் போவதை விரும்பவில்லை; எதிர்க்கிறார். மகன் அனுரா பண்டாரநாயக்கவையே அப்பதவியில் அமர்த்த வேண்டும் என்பது அவரது அழுங்குப்பிடி.

இத்தகைய அரசியற் போட்டி நிலையில் அனுருத்தவை பிரதமராக்க வேண்டும் என்று மறைமுகமாகச் சிபார்சு செய்யும் வகையில் மல்வத்த மகா நாயக்க தேரர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்தினால் வடக்கு – கிழக்கில் நடத்தப்படும் போர் சோர்ந்து போய் விடும் என்ற தமது கருத்தை அழுத்திக் கூறுவதற்காக, அமைச்சர் ரத்வத்த. மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களின் உதவியை நாடினார் என்பது பகிரங்கமானதாகும்.

போர் சாமதானத்துக்கானது என்ற அனுருத்த — சந்திரிகாவின் கோட்பாட்டை, மகா நாயக்க தேரர்களும் அவர்களைச் சார்ந்த பௌத்த சங்கத்தினரும் ஆதரித்து வருகின்றனர். போரை முடிவுக்கு கொண்டுவராமல் பேச்சுவார்த்தை நடத்துவது நாட்டு மக்களுக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகம் என்ற புதிய அர்த்தமும் இப்போது கொடுக்கப்படுகின்றது.

இந்தக் கோட்பாடுகளும் அர்த்தங்களும் தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளை வழங்காமல், அரைகுறைத் தீர்வை அவர்கள் மீது திணிப்பதற்கான கோஷங்களும் பிரலாபங்களும் என்பது தெளிவாகிறது.

இனம் இனத்தோடு சேரும், ஆகையால் மல்வத்த மகாநாயக்கரின் சிபார்சு ஒன்றும் புதுமையானதாக இல்லை,

# கூட்டுத்தாபனங்கள், சபைகளிலுள்ள ஊழியர்களை குறைக்க ஆலோசனை

## உலகவங்கி சிபார்சு

கொழும்பு, ஜூலை 10

நாட்டில் உள்ள கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளில் பணியாற்றும் ஊழியர்களில் 50 சதவீதமானவர்களைக் குறைக்க வேண்டும் என்று உலக வங்கி அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

அவ்வாறு ஊழியர்களைக் குறைக்காவிடின அந்த நிறுவனங்களைத் தொடர்ந்து இயங்க வைக்க முடியாத நிலை ஏற்படும் எனவும் உலகவங்கி தெரிவித்துள்ளது.

இந்த ஆலோசனையை இலங்கை அரசு ஏற்காது விட்டால் உலக வங்கியின் உதவிகளும், ஏனைய நாடுகளின் உதவிகளும் இலங்கைக்கு நிறுத்தப்படலாம் என்று உலக வங்கி அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கடந்த அரசாங்கத்துக்கு இதே மாதிரியான எச்சரிக்கையை உலக வங்கி விடுத்த போது, அன்றைய அரசாங்கம் 44/90 சுற்றறிக்கையின் படி சுயவிருப்பின் பேரில் ஊழியர்கள் ஓய்வுபெற வசதி செய்தது.

அதன்படி சுமார் ஒரு லட்சம் பேர் ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-10-3)

# தும்பளை- வல்லிபுரம் வீதி திருத்தப்படவில்லை

வடமராட்சி, ஜூலை 10

பருத்தித்துறை- மருதங்கேணி பிரதான வீதியில் தும்பளை தொடக்கம் வல்லிபுரம் வரையிலான வீதி சேதமடைந்து நீண்ட காலமாகியும் இன்னமும் திருத்தப்படவில்லை.

தும்பளை- வல்லிபுரம் வீதிக்கிடையில் உள்ள இரு மதகுகள் திருத்தப்படுவதற்காக உடைக்கப்பட்டு திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அவ்வேலைகளும் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக வாகனங்கள், சைக்கிள்களில் செல்வோர் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

(ஐ-173)

## புலிகளுடன் தொடர்புடைய

# சந்தேக நபர்களுக்கு பூஸாவில் புதிய சிறை

கொழும்பு, ஜூலை 10

களுத்துறையிலுள்ள ஜாவத்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் சந்தேக நபர்கள் அனைவரையும் பூஸாவில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக ''லங்காதீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய சிறைச்சாலை அமைக்கும் பணிகள் விரைவில் முடிவடையவுள்ளன என சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய சிறைச்சாலையில் விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் மட்டுமே தடுத்து வைக்கப்படவுள்ளனர் எனவும் —

அதற்கென விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ஐ-10)

# டாக்டர் நியமனம்

சண்டிலிப்பாய், ஜூலை10

தொல்புரம் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக டாக்டர் எஸ். கமலநாதன் இம்மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். சுகாதார சேவை பிரதிமாகாணப் பணிப்பாளர் இந்நியமனத்தைச் செய்துள்ளார்.

(ஐ-135)

## மீள் குடியேற்றம் பற்றி

# பிரதேச செயலர்களின் ஆலோசனை பெற முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 10

திருகோணமலையிலிருந்து கப்பல் மூலமாக தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுவது தொடர்பான ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான கூட்டம் ஒன்று யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்கு மீண்டும் வருகின்ற மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றுவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் இந்த மீளக்குடியேற்றம் தொடர்பாக பிரதேச செயலகங்களிடமிருந்து ஆலோசனை பெற்றுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

(ஐ.5-7)

# வேலணைப் பாடசாலை மீண்டும் திறக்கப்படும்

நெடுந்தீவு, ஜூலை 10

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வசதியாக இம் மாத இறுதிக்குள் அது கல்வித் திணைக்களத்திடம் கையளிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

தீவுப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்படி வித்தியாலயத்தில் பாதுகாப்புப் படையினர் நிலை கொண்டிருந்தனர். மக்கள் அங்கு மீளக் குடியேறியதும் மாணவர்களின் வசதி கருதி பாடசாலையை மீண்டும் திறக்கக் கூடியதாக அதனைக் கையளிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், பொதுமக்களும் படையினருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

தற்சமயம் மேற்படி பாடசாலையை மீண்டும் திறக்கக் கூடியதாக அதனைக் கையளிக்க கடற்படை அதிகாரிகள் முன்வந்துள்ளதாகவும் எனினும் அண்மையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் முகாம் தொடர்ந்தும் இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-111)

# பிரியாவிடை

யாழ்ப்பாணம், ஜூலை 10

கடந்த மாதம் 30 ஆம் திகதியுடன் கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பன்னாலை சேர். கனகசபை அ. த. க. பாடசாலையின் உபஅதிபர் க. கார்த்திகேசுவின் பிரியாவிடை வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் நா. ஆனந்தராசா தலைமையில் இணுவில் காரைக்கால் சிவன் கோயிலடியில் தற்காலிகமாக இயங்கும் பன்னாலை சேர். கனகசபை அ. த. க. பாடசாலையில் நடைபெறும்.

(ஐ-10 3-4)

# இறையன்பின் காரணமாக செயற்கரிய செய்த பெரியவர்கள்

''செயற்கரிய செய்வர் பெரியர்'' என்பது வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழி. இறைவன் மீது கொண்ட அன்பின் முதிர்ச்சி காரணமாக உலகத்தவர் என்றும் நினைக்கவியலாத அளவுக்கு அரிய செயல்களைச் செய்த அடியவர்களின் வரலாறுகள் திருத்தொண்டர் பெரிய புராணத்தித்திலே காணப்படுகின்றன. அடியார் வடிவில் இறைவன் தம்மிடம் வந்ததும் மனைவியையே தானமாகத்தரும்படி கேட்ட பொழுது சற்றும் தயங்காது தம் மனைவியை அடியாருடன் அனுப்பி வைத்தார் இயற்கைநாயனார். அதுவும் போதாதென்று அடியாருக்குத் தமது உற்றார் உறவினர் துயர்விளைவித்தல் கூடும் என்று அஞ்சி அவருக்குப் பாதுகாவலாகவும் சென்றார்.

''இன்புறு தாரந் தன்னை ஈசனுக் கன்பர் என்றே துன்புறாதுதவும் தொண்டர் பெருமையைத் தொழுது வாழ்த்தி ......'

— பெரியபுராணம்

வைரவராய் எழுந்தருளிய பெருமானார் வேண்டிக் கொள்ளத் தம் குழந்தையையே அரிந்து அமுது சமைத்துக் கொடுத்தார் சிறுத்தொண்டநாயனார். தம் தந்தை மண்ணால் தாம் ஆக்கிவைத்த சிவலிங்கத்தை காலால் எற்றினார் என்று கோலையே மழுவாய்க் கொண்டு தந்தையின் காலைத் துண்டித்தார் சண்டேஸ்வர நாயனார். சுந்தரமூர்த்திநாயனார் அடியார்தனை வணங்காது சென்றது கண்டும், பரவையாரின் மனைக்கு இறைவனைத் தூது நடத்தியது கேட்டும் வெகுண்டு அவருக்கு தான் புறகு என்று சொன்னவர் விறன் மிண்ட நாயனார். அவர் தம்மை நாடிவந்த வேளை அவரைக் காண்பதுவும் பாவம் என்று வயிற்றைக் கிழித்துத் தற்கொலை புரிய முயன்ற செயலையும் அவர் புரிந்தார்.

எறிபத்த நாயனார் சிவகாமி ஆண்டார் என்னும் அடியவரின் பூக்கூடையை புகழ்ச் சோழரசு பட்டத்து யானை சிதறியது கண்டு மனம் பொறுக்காது அதன் தும்பிக்கை அறுமாறு தமது கோடரியால் வெட்டி வீழ்த்தினார். எதிர்த்து வந்த பாகர் ஐவரையும் கொன்று தொலைத்தார். புகழ்ச் சோழர் களிற்றின் செயல்கண்டு வருந்தித்

**க. சிவசங்கரநாதன்**

தம்மையும் வெட்டி வீழ்த்துமாறு விறன் மிண்டரை வேண்ட விறன் மிண்டரோ தம்மையே கொன்றிட முன்வந்தார். இத்தகைய செயற்கரிய அன்புச் செயல்கள் ''வல்வினை'' என்று திருக்களிற்றுப் படியாரில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அடியார்க்கு அமுதூட்டி வறுமையுற்ற காலத்திலும் மனந் தளராது அத்தொண்டினைப் புரிந்த இளையான் குடிமாறநாயனார், மனைவியாரின் மாங்கல்யத்தை விற்றுக் குங்குலியத் தொண்டு புரிந்த குங்குலியக்கலய நாயனார், திருவோடளித்துச் சத்தியம் காத்த திருநீலகண்ட நாயனார், கோவணமளித்து அதனால் ஆட்கொள்ளப் பெற்ற திருக்குறிப்புத் தொண்ட நாயனார், நீரால் விளக்கெரித்த நமிநந்தியடிகள் முதலியவர்களின் அன்பு நெறியினை நாம் எண்ணிப் போற்றாமல் இருக்க முடியாது.

## நாளை

ஆனி - 27

சனிக்கிழமை

திதி: துதியை

முன்னிரவு 08.43 வரை.

நட்சத்திரம்: திருவோணம்

பின்னிரவு 04.19 வரை.

சுபநேரம் 02.59 - 04.29

ராகுகாலம்: 08.29 - 10.59

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

குழந்தைக்கு நேசிக்கக் கற்பிப்பதன் மூலம் தாய் [illegible] முடிக்கிறாள்.

— பராயடு

# ச.ச. நிலையம் திறப்பு விழா

அரியாலை, ஜூலை 10

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் புனரமைக்கப்பட்ட புதிய மண்டபத்தின் திறப்புவிழா இன்று வெள்ளி மாலை 4 மணிக்கு நிலையத் தலைவர் செ. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறும்.

யாழ். மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

நிலைய பொருளாளர் கா. கணேசதாசன் வரவேற்புரை நிகழ்த்துவார். யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் கௌரவ விருந்தினராகவும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி. கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

பாலர் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

(ஐ-17-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை செய்யப்பட்ட கிருமி நாசினிகள் பாவனை கட்டுப்படுத்தப்பட வேண்டும்

## மாகாண அமைச்சிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். மாவட்டத்தில் பூச்சி; பூஞ்சண நாசனி சட்டத்தை அமுல்படுத்த சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு வடக்கு–கிழக்கு மாகாண விவசாய அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) த. சிவலோகநாதன் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது விவசாயிகள் பலரும் தடைசெய்யப்பட்ட மருந்து வகைகளை விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். அது மட்டுமன்றி பாவனைக்குதவாத மருந்து வகைகளையும் பயன்படுத்துகிறார்கள்.

இதேவேளை—

களை நாசனி முதலிய மருந்து வகைகளை பொது வியாபார நிலையங்களில் ஏனைய உணவுப் பொருள்களுடன் சேர்த்து வைத்து விற்பனை செய்யும் நிலையும் காணப்படுகிறது.

இத்தகைய நடவடிக்கைகளை இனங்கண்டு ஆக்கபூர்வமான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனால் பூச்சி, பூஞ்சண நாசனி சட்டம்தொடர்பான விடயங்களை அறிந்த அதிகாரிகள் நியமிக்கப்படல் வேண்டும்.

தற்போது சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்ற மரக்கறிகள், பழவகைகள் அனைத்தும் மருந்து வகைகளைப் பயன்படுத்தியே சந்தைக்குக் கொண்டுவரப்படுகின்றன.

இதனாலேயே பல்வேறுபட்ட நோய்கள் குடாநாட்டில் பரவுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலரும் இதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-7)

## நல்லூர்ப் பிரதேசத்தில்

# வாக்காளர் இடாப்பு திருத்த வேலைகள்

வலி. வடக்கு, ஜூலை 10

நல்லூர்ப்பிரதேச செயலர் பிரிவில் தேர்தல் வாக்காளர் இடாப்பு திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் தமது 18 ஆவது வயதைப் பூர்த்தி செய்தவர்கள் தமது பெயர் விவரங்களை கிராம அலுவலர்களிடம் இருந்து பெறப்படும் படிவத்தில் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான படிவங்களை தேர்தல்திணைக்களம் கிராம சேவையாளர்களிடம் வழங்கியுள்ளது. (ஐ-86)

# பரீட்சை மாணவருக்கு மின் விநியோகம் இப்படியா?

30-6-98 வரை ஓரளவு ஒழுங்காக சீராக வழங்கப்பட்டு வந்த மின்சாரம் மிகச் சீர்கேடான முறையில் 1-7-98 முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

30-6-98 வரை ஒன்றுவிட்டு ஒரு நாளுக்கு மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரையும், பின்னர் 8.30 மணி முதல் 11.00 மணி வரையும் இல்லையேல் 7.30 அல்லது 7.45 முதல் 11.00 மணிவரையும் காலையில் 5.00 மணி முதல் 6 மணிவரையும் மின்சாரம் சீராக வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் 01-07-98 முதல் மின்வழங்கல் நேரம் நீடிக்கப்பட்ட பின்னர் மின்சாரம் காங்கேசன்துறை வீதி - நாவலர் சந்தியிலிருந்து ஐந்து சந்தி வரையும், தாபாற்கந்தோர் ஒழுங்கை, கோபால் ஒழுங்கை, பிரப்பங்குள ஒழுங்கை என்னும் இடங்களின் விநியோகம் ஒன்றுவிட்டு ஒருநாளுக்கு இரவு 8 மணிமுதல் 8.45 மணி வரையும் பின்னர் 11.15 மணி முதல் 12.00 மணிவரையும் மட்டுமே விநியோகிக்கப்படுகின்றது.

இது பற்றி மின்சாரசபையிடம் முறையிட்டால் ''கவனிக்கின்றோம்'' என்பதோடு சரி. ஆனால் மின்சாரசபை ஊழியர்கள் வதியும் வைத்தீஸ்வராக்கல்லூரி வீதிக்கு வழங்கப்படும் மின்சாரம் விளம்பரத்துக்கு அமைய வழங்கப்படுகிறது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

''அகப்பை பிடிப்பவன நம்மாள் ஆனால் அடிப்பந்தி என்ன? நுனிப்பந்தி என்ன?''

எப்படியாயினும், எம்மவர் கல்வியைப் பாழடித்தால் அப்பெருமையும் கட்புலனைக் கெடுத்தால் அப்புண்ணியமும் இலங்கை மின்சார சபையைத் தான் சாருமோ யாரறிவார்? இனியாவது மாணவர்கள் கல்வியைக் கருத்துடன் தொடர்வதற்கு மின்சார சபையினர் தமது தலையாய பங்களிப்பைப் புரிவார்களா?

-க. சிவராஜா

வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# நடைபாதை தேவை

எமது யாழ். நகரில் நாளாந்தம் எத்தனையோ வீதி விபத்துக்கள் நடைபெற்று வருகின்றன. இன்று வீடு போய் சேருவோமா? என்பது சந்தேகமாகவே இருக்கின்றது—

கடந்த வாரம் ஓரமாகச் சென்ற நான் கூட வேகமாக வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதப் பார்த்தேன். திடுமென வாய்க்காலுக்குள் பாய்ந்ததால் உயிர் தப்பினேன்— மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் கூட மக்களைப் பற்றி சிந்திப்பதில்லை. வீதி விபத்துக்களை கண்காணிக்கும் பொலீஸாரும் கடமையிலிருப்பதில்லை—

இப்படியான நேரங்களில் மக்களும் போக்குவரத்து விதிகளை மீறி நடுவீதியில் நடக்கின்றார்கள். ஆகவே முன்பு இருந்தது போல் இருபாதை ஓரங்களிலும் நடைபாதை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எம் போன்றவர்களின் அவர். எமது அவா நிறைவேற்றப்படுமா?

வி. பிரான்சிஸ்

இல; 08, ஒடக்கரைவீதி,
யாழ்ப்பாணம்.

# ஜூன்மாத சம்பளம் கிடைக்கவில்லை

வடமராட்சி, ஜூலை 10

வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் ஊக்குவிப்பாளருக்கு இன்னமும் ஜூன் மாத சம்பளம் வழங்கப்படவில்லை.

சமுர்த்தி முகாமையாளர்களும், ஊக்குவிப்பாளர்களில் ஒரு பகுதியினரும் பல்வேறு திணைக்களங்கள் சபைகளுடன் இணைக்கப்பட்டுள்ள போதிலும் அனைவருக்கும் பிரதேச செயலகங்கள் ஊடாகவே சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. (ஐ-173)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 10

காலஞ் சென்ற கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா புலமைப்பரிசில் நிதியத்தின் 'கலங்கரை விளக்கு கல்விப் பணிப்பாளர் இரத்தினராசா' என்ற நூல்வெளியீட்டு விழா எதிர்வரும் 14-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-ரீ)

# கடலில் வீழ்ந்த லொறி

யாழ்ப்பாணம், ஜூலை 10

பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை இறக்கி ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்த லொறி ஒன்று நேற்று முன்தினம் கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

இறங்குதுறையில்பொருள்களை ஏற்றியபடி நின்ற லொறி ய கடலில் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

லொறிச் சாரதி உடனடியாக மீட்கப்பட்டார். பின்னர் அங்குநின்ற பணியாளர்களின் உதவியுடன் லொறியும் பொருள்களும் வெளியே எடுக்கப்பட்டன. (இ-173-ரீ)

# கல்விச் சீர்திருத்தக் கருத்தரங்கு

திருநெல்வேலி, ஜூலை 10

புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று யாழ். மத்திய கல்லூரியில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ். [illegible] கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-135)

# விளையாட்டுத்துறை அதிகாரி இடமாற்றம்

திருகோணமலை, ஜூலை 10

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அதிகாரியான எஸ். குணரத்தினம் மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவால் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் அம்பாறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

சுதேச வைத்தியத்துறைப் பணிப்பாளர் எஸ். பாலசுப்பிரமணியமும் ஆளுநரால் பதவி நீக்கம் செய்யப்பட்டு பேராசிரியர் பவானி அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைப் பேராசிரியரான அவர் இரு வருட ஒப்பந்த அடிப்படையில் இப்பதவியை ஏற்றுள்ளார்.

அதேநேரம் —

மாகாண சபையில் உயர் பதவி வகிக்கும் மற்றும் பலர் இடமாற்றம் செய்யப்படவிருப்பதாக மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

# தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலகம் திறப்பு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின யாழ். மாவட்ட அலுவலகம் நேற்று முன்தினம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாக இயக்குநர் இ. எம். எஸ். பி எக்கநாயக்க நாடாவெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் ரீ. சிவதெட்சணாமூர்த்தி தலைமையில் நடந்த இவ் விழாவில் மேற்படி அலுவலகத்தின் தகவல்பணிமனையை யாழ்ப்பாணம் பிரதேச செயலர் ப. செந்தில்நந்தனன் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வுக்கு ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த விசேட இளைஞர் ஆய்வாளர் ஜிம்அன்டாஸன், தேசிய சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் என். பேரானந்தன், யாழ். மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ். சக்திவேல், யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளனத் தலைவர் செல்வன் என். பிரபாகரன் மற்றும் பிரதேச இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகக் காலாண்டு சஞ்சிகையான இளைஞர் நண்பன் சஞ்சிகை வெளியிடப்பட்டது. (ஐ-7-5-ரீ)

# தெற்கில் விரைவில் மின்சார ரயில் சேவை

கொழும்பு, ஜூலை 10

கொழும்புக்கும் றாகமத்துக்கும் இடையில் மின்சார ரயில்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக போக்குவரத்து. நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இந்த மின்சார ரயில் சேவைக்கென சுமார் 300 கோடி செலவாகும் என மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கென புதிய ரயில் பாதைகளை விரைவில் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அடுத்த ஆண்டிலிருந்து இந்த ரயில்சேவை நடத்தப்படும் எனவும் அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார். (ஐ-10)


உ
சிவமயம்



அராலி மத்தி, அராலி அருள்மிகு

உலோலசிட்டி விநாயகர் தேவஸ்தான

புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ

மஹா கும்பாபிஷேகம்

ஆனி மாதம் 28 ஆம் நாள் 12-07-1998 ஞாயிற்றுக்கிழமை 10 மணி முதல் 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல்.

ஆனி மாதம் 29 ஆம் நாள் 13-07-1998 திங்கட்கிழமை சதுர்த்தித் திதியும் சதய நட்சத்திரம் சித்தயோகமும் கூடிய முற்பகல் 10.30 முதல் 11.34 மணி வரை உள்ள கன்னிலக்ன முகூர்த்த வேளையில் விநாயகப் பெருமானுக்கும் நூதன பரிவார மூர்த்திகளாகிய தம்ப விநாயகர் வைரவ மூர்த்திக்கும் கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறும்.

அத்தருணமும் அதன் முன்பின் நிகழும் கிரியா காலங்களிலும் வருகை தந்து எம்பெருமானைத் தரிசித்து மும்மைப் பயன்களோடு

மண்ணில் நல்ல வண்ணம் சகல செல்வ
யோக மிக்க பெருவாழ்வு வாழ்வீர்களாக!

ஆலய பரிபாலன சபையினர்

(சி/4233)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு
# வருவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

## போதிய இட வசதிகள் இல்லை

வலி. வடக்கு, ஜூலை 10

யாழ். போதனா வைத்தியசாலை மனநோய்ச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

தற்போது நாளாந்தம் 150 முதல் 200 பேர்வரை அங்கு சிகிச்சைக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு சிகிச்சைக்கு வருவோரில் ஒரு பிரிவினர் உளவளத்துணை சிகிச்சைக்கு [ COUNSELLING ] உட்படுத்தப்படுகின்றனர். மற்றொரு பகுதியினர் உடல் அமைதிப்படுத்தலுக்கான சிகிச்சை பெறுகின்றனர்.

இவ்விரு சிகிச்சைகளை மேற்கொள்ளவும் போதிய இடம், கட்டில் மற்றும் பிற வசதிகள் இப் பிரிவில் இல்லாததால் சிகிச்சை பெற வருவோர் நீண்ட நேரம் காத்திருக்க நேரிடுகிறது. (ஐ-86)

# ஓய்வூதிய கொடுப்பனவில் மாற்றம் எதுவும் இல்லை

## நாடாளுமன்றில் தெரிவிப்பு

ஓய்வூதியக் கொடுப்பனவு முறைகளில் எதுவித மாற்றமும் மேற்கொள்ளப் போவதில்லை என கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரான கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போது கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் முகமாகவே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டியிருக்கும் என ஜனாதிபதி வெளியிட்டதாகக் கூறப்படும் கருத்தைத் தொடர்ந்தே ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் இந்தக் கேள்வியை எழுப்பினார். (இ-10)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 10

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய சங்காபிஷேகம் நாளைசனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் அம்பாள் வீதியுலாவும் இடம் பெறும். (ஐ-17)

★ ★ ★

தென் புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாளாகிய இன்று வெள்ளிக்கிழமை மாலை பூங்காவனம் நடைபெறும். (ஐ-109-137)

★ ★ ★

தென்புலோலி குரும்பைகட்டி வைரவர் கோயில் வருடாந்த வேள்வி உற்சவம் எதிர் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

புலோலி காந்தியூர் வைரவர் கோயில் வருடாந்த வேள்வி உற்சவமும் அன்றைய தினம் இடம் பெறும். (ஐ-173)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 10

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலின் ஸ்ரீ சிவன் ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை10

அராலி வடக்கு மயிலப்புலம் அருள்மிகு ஸ்ரீகந்தசாமி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முடிவடைகிறது. காலை 9-30 மணிக்கு விசேட அபிஷேகமும், பூசையும், சண்முகா ஆச்சனையும் நடைபெற்று, நண்பகல் 1-00 மணிக்கு சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

இருபாலை கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தில் இன்று மாலை 5-00 மணிக்குப் பூங்காவன உற்சவம் இடம் பெறும். நண்பகல் அன்னதானம் வழங்கப்படும். (இ-9)

★ ★ ★

அராலி மத்தி அருள்மிகு உலாலசிட்டி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று திங்கட்கிழமை காலை 10.30 மணி முதல் 11.34 மணி வரையான சுப முகூர்த்தவேளையில் விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். (இ-12)

★ ★ ★

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ தலங்காவல் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா அடுத்த நாள் திங்கட்கிழமை காலை 8-00 மணிக்கு நடைபெறும். (இ-7)

## சிறப்பாக பணியாற்றும் கூ.ச.

# கிளை முகாமையாளருக்கு பணப்பரிசு வழங்க முடிவு!

அரியாலை, ஜூலை 10

யாழ். ப. நோ. கூ. சங்க விற்பனைக் கிளைகளில் சுகாதார விதிகளைப் பேணுவதிலும், பொருள்களைக் காட்சிப்படுத்தி வியாபார நடவடிக்கையைப் பெருக்குவதிலும் திறமையாகச் செயற்படும் முகாமையாளர்களுக்கு பணப்பரிசில் வழங்கி ஊக்குவிக்கப்படவுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற சங்கத்தின் இயக்குநர் சபைக் கூட்டத்தில் இது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டது.

கிளைகளில் சுகாதார விதிகளைப் பேணுவதிலும், வியாபாரத்தை கவர்ச்சிப்படுத்துவதிலும் முகாமையாளர்களுக்கே முக்கிய பங்குண்டு. எனவே அவர்களை ஊக்குவிப்பதற்காக ஆறு மாத காலத்துக்கு ஒரு தடவை சிறந்த முகாமையாளர்களைத் தெரிவு செய்து பணப்பரிசு வழங்கப்பட உள்ளது. (ஐ-17)

# கட்டுநாயக்க பகுதியில் மோதல்

கட்டுநாயக்க விமானநிலையச் சுற்றாடல் பகுதியில் நேற்று அதிகாலை ஒருமணியளவில் இரு கோஷ்டியினருக்கிடையில் மோதல சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலில் துப்பாக்கிகள், தடி, பொல்லு முதலியன பயன்படுத்தப்பட்டன எனவும்—

இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர் எனவும்—

ரி-56 ரக துப்பாக்கிகள் மோதலின் போது பயன்படுத்தப்பட்டன எனவும்—தெரிவிக்கப்பட்டது (இ-7)

### ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்)

யீனமே காரணமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளப்படத் தக்கது அல்ல என்று சந்தானந்த தேரர் இதற்கு முன்பும் தெரிவித்திருந்தார். (இ-7)

### பதில்..

(முதலாம் பக்கத்தொடர்)

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் வெளிநாடு சென்றுள்ளதால், பதில் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சராக ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நியமிக்கப்பட்டுள்ளார். (இ-3-7)

### வாஜ்பாயை...

(முதலாம் பக்கத்தொடர்)

தமிழ் மக்களின் அபிலாசைகள், அவற்றுக்கான தீர்வு என்பன தொடர்பாகவும் — இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்த சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருமாறு தமிழ்க் கட்சிகள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தைக் கோரியுள்ளன.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக இந்தியத்தூதரகம் இதுவரை எதுவும் அறிவிக்கவில்லை என்றும்—

தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பைத் தவிர்க்க முயல்வதாகவும்— தமிழ்க் கட்சி வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்தன.

தமிழ்க்கட்சிகளுடன் சந்திக்க ஏற்பாடு செய்யப்படுமா? அல்லது ஏதாவது விருந்து நிகழ்ச்சியில் சாட்டுக்கு கலந்துரையாட ஏற்பாடு செய்யப்படுமா? என்று தமிழ்க்கட்சி வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

### நம்பிக்கையில்...

(முதலாம் பக்கத்தொடர்)

கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் தீர்மானம் பற்றிய அறிவித்தல் கிடைத்திருப்பதாகவும் விவாதத்துக்கான திகதி நிர்ணயிக்கப்படவில்லை எனவும் சபாநாயகரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

'கிரடிற் காட்' சர்ச்சை தொடர்பான பத்திரிகை அறிக்கைகள் அவதூறு விளைவிக்கும் வகையில் இருப்பதாகக் கூறி அமைச்சர் மங்கள சமரவீரவின் வழக்கறிஞர்கள் ஏற்கனவே [illegible] அனுப்பிவைத்துள்ளார்கள். (இ-7)

### களுத்துறைசிறை படுகொலை

# விசாரணை அறிக்கை 17 ஆம் திகதி கையளிப்பு

கடந்த டிசம்பர் மாதம் களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையை இம் மாதம் 17 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்ட இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல்களில் மூவர் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவும்—

அவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுப்பதற்கான வழிவகைகளைச் சிபார்சு செய்யவும்—

சிறைச்சாலைத் திணைக்களத்தை முற்றிலுமாக மறுசீரமைப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பரிந்துரைக்கவும் —ஜனாதிபதியால் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இந்தத் தனிநபர் ஆணைக்குழுவின் ஆணையாளராக கொழும்பு உயர் நீதி மன்ற நீதியரசர் ராஜா பெர்னாண்டோ பணியாற்றினார். செயலாளராக ஜி. வி. விபுலகுண என்பவர் கடமையாற்றினார். (இ-10)

# தொண்டா யோசனைக்கு செல்லச்சாமி எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 10

மலையகப் பாடசாலைகளில் பணியாற்ற தமிழ் நாட்டிலிருந்து ஆசிரியர்களை வரவழைப்பது தொடர்பாக அமைச்சர் எஸ். தொண்டமான் முன்வைத்துள்ள யோசனைக்கு இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம். எஸ். செல்லச்சாமி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், இலங்கையர் என்ற ரீதியில் இதனை ஏற்க முடியாது. தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் வெற்றிடங்கள் உள்ளன.

இந்த வெற்றிடங்களை நாட்டிலுள்ள வேலையற்ற படித்த இளைஞர் யுவதிகள் மூலம் நிரப்பமுடியும். இவர்களுக்கு தேவை பயிற்சி மட்டும் தான். இதற்கு தமிழ் நாட்டு கல்வி நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறலாம்.'' என்றார். (இ-21)

# 9 வயது மாணவன் மோதலில் மரணம்

கொழும்பு, ஜூலை 10

பாடசாலை இடைவேளை நேரம் மாணவர்களில் இருவர் நேருக்குநேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

கினிதுவ மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் 9 வயது மாணவனே இவ்வாறு மரணமானவராவார். (இ-3)

### உயிலங்குளம்...

(முதலாம் பக்கத்தொடர்)

நாள்களுக்கு நீடிக்கப்படும் என நேற்று அறிவிக்கப்பட்டது.

அதேநேரம் — அவசர அத்தியாவசிய பணிக்காக நேற்று மூவர் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர் கடந்த திங்கட்கிழமை 300 பேர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். (இ-3-164)

### கல்விச்...

(முதலாம் பக்கத்தொடர்)

ளார். இந்த மாநாட்டுக்கு பத்திரிகையாளர்களையும் அவர் அழைத்துள்ளார்.

இந்த மாநாட்டில் வைத்து பதவி விலகிச் செல்லும் அறிவிப்பை அவர் விடுக்கலாம் என மாகாண சபை வட்டாரங்களில் நேற்று பரவலாகப் பேசப்பட்டது. (இ-3)

## புளுக்குனாவ...

(முதலாம் பக்கத் தொடர்)

★ கப்டன் சுவேந்திரன் ( அருணாசலம் கைலாயநாதன் — மட்டக்களப்பு )

★ லெப். கென்னடி அல்லது சஞ்சயன் ( சுகுமாரன் ஜெயகுமார் — மட்டக்களப்பு )

★ கண்ணதாசன் ( சிவதாஸ் நிவேந்திரன் — மட்டக்களப்பு )

★ லெப். வேதருபன் அல்லது யூட் ( தியாகராசா ராஜ்மோகன் — மட்டக்களப்பு )

★ லெப். பாலவதனி ( மாணிக்கதேவி முருகமூர்த்தி — மட்டக்களப்பு )

★ 2 ஆம் லெப். பவளசுந்தரம் ( நாகராசா ரவிச்சந்திரன் — மட்டக்களப்பு )

★ 2 ஆம் லெப். சுகந்தன் ( இரத்தினசிங்கம் புனிதன்— மட்டக்களப்பு )

★ சூரி ( தங்கராசா ரவீந்திரன் — மட்டக்களப்பு)

★ லெப். புண்ணியகுமார் ( ஜெயன்முருகு யோகநாதன் — மட்டக்களப்பு ) (இ-3-6)

## ஆலோசகர்களை...

(முதலாம் பக்கத் தொடர்)

விளையாட்டுத்துறை ஆலோசராக பணிபுரியும் எஸ். எதிர்வீரசிங்கம் தவிர்ந்த ஏனைய ஆலோசகர்களை வேலை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாகாண கல்வியமைச்சில் பணிபுரியும் பலரை 'களை' எடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-3)

## ஐ. நா. தூதுவர்...

(முதலாம் பக்கத்தொடர்)

யேற்றப்படும் பட்சத்தில், அவருக்கு அரசில் இடமளிக்க அமைச்சர்கள் மட்டத்தில் எதிர்ப்பு நிலவுவதாகவும் —

இதைச் சமாளிப்பதற்காக அவர் ஐ. நா வின் இலங்கைப் பிரதிநிதியாக நியமிக்கப்படலாம் என்றும்— அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அதேநேரம் —

ஐ. தே. கவின் பின்வரிசை உறுப்பினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ள போதிலும், அக்கட்சியில் இருந்து விலகுமாறு தமக்கு எதுவித நிர்ப்பந்தமும் இல்லை என்று அநுரா தெரிவித்ததாக இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சேருமாறு அழைப்புக் கிடைத்துள்ளதா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோது அதை அநுரா மறுத்துவிட்டார். (இ-3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது 'புதிய வெளியீடு!

சரத்குமார் - சிம்ரான் நடித்த

நட்புக்காக

அடுத்த வெளியீடு!

தர்மா

வீடியோ CD வெளியீடுகள்!

★ வில்லாதி வில்லன்
★ சுந்தர புருஷன்
★ ஊர்க்காவலன்
★ அமைதிப்படை
★ ஆயுத பூசை
★ சூரியா

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/4240)


# ப.நோ.கூ. சங்கங்களை புனரமைக்க உதவுக

## ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கோரிக்கை

மீளக்குடியேறிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு உதவும் பொருட்டு அங்குள்ள ப.நோ.கூ. சங்கங்களை புனரமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவ வேண்டும் என்று வலி-வடக்கு புனர்வாழ்வுச் சபையினர் அண்மையில் தெல்லிப்பழைக்கு விஜயம் செய்த ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரடாசிக் கோபோ, நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் பிறாங் ஜே பொல்மன் ஆகியோரை தெல்லிப்பழையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே புனர்வாழ்வுச்சபையினர் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

1992 ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் பாதிக்கப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்குவதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 27 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. சீரற்ற சூழ்நிலையால் இந்த நிதி வழங்கப்படவில்லை என்பதையும் புனர்வாழ்வுச் சபையினர் சுட்டிக்காட்டினார்கள்.

ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, வசாவிளான் மத்திய கல்லூரி ஆகியவற்றையும் பார்வையிட்டனர். இந்த மாதம் 2 ஆம் திகதி இங்கு வருகைதந்த ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளுக்கும் சென்று இங்குள்ள நிலவரத்தை பார்வையிட்டதுடன் 6ஆம் திகதி கொழும்பு புறப்பட்டனர்.

(இ-5)

# கால்நடை அபிவிருத்தி செயலர் வருகை

வடமராட்சி, ஜூலை 10

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கால்நடை அபிவிருத்தி மேற்கொள்வதை ஆராய்வதற்கு கால்நடை அபிவிருத்தி மற்றும் தோட்ட அடித்தள அமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ. சக்திவேல் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

இவர் அரசாங்க அதிபர் மற்றும் யாழ். குடாநாட்டு கால்நடை வைத்திய அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து கால்நடை அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்களை மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-173)

# தாச்சிப் போட்டி

யாழ். பல்கலைக்கழக விளையாட்டவையினால் நடத்தப்படும் தாச்சிச்சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

(இ-9)

# மண் அள்ளத்தடை

வடமராட்சியில் மணல் அள்ள அனுமதிக்கப்படாத பகுதிகளில் மண் அள்ளுவதைத் தடை செய்யுமாறு பிரதேச செயலர் அப்பகுதி கிராமசேவையாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மணற்காட்டுப் பகுதியிலேயே மண் அள்ளுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், வல்லிபுரம், வலிக்கண்டிப் பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அள்ளப்படுவதால், அப்பகுதி பள்ளமாகி வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதையடுத்தே பிரதேச செயலர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

(இ-ரீ)


ஜூலை 1998

இன்னிசை நற்செய்திப் பெருவிழா

மீண்டும் உங்களுடன்

தந்தை பெர்க்மான்ஸ்

இயேசுகிறிஸ்துவினால் உங்களுக்கு சமாதானமும் விடுதலையும் கொண்டுவரும்

"ஆறுதலின் தொனி"

ஆறுதலளிக்கும் தேவ கானங்கள்; விசேட ஜெபங்கள்

| இடம் | காலம் | நேரம் |
|---|---|---|
| செல்லமுத்து விளையாட்டரங்கு மானிப்பாய் | 09 - 11 | பி.ப. 3-30 |
| ★ துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம். | 15 - 17 | பி.ப. 3.30 |
| ★ செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானம், கல்வியங்காடு/ நல்லூர். | 18 - 19 | பி.ப. 3.30 |

உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்!

பிரவேசம் இலவசம்.

(சி/4206)



கஜமுகா ரேட் சென்ரர்

இல. 281, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்

- O றேடியோ வகைகள்
- O T.V. வகைகள்
- O டெக் வகைகள்
- O வீடியோ கமரா
- O வீடியோ கசற்
- O ஓடியோ கசற்
- O ரெலிபோன் வகைகள்
- O பிளாஸ்டிக் வாளிகள்
- O போட்டோஸ்ரற் இயந்திரம் (Sharp SF 1016)
- O பிளாஸ்டிக் பொருள்கள்

C.I.C யின் தயாரிப்பான

அல்கத்தீன் பைப் 2", றபர் சிலிப்பர் வகைகள் (Ransers)
விவசாய இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றை

மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானவிலையில் பெற்றுக்கொள்ளவும்

மற்றும்

வெளிநாட்டு/ உள்நாட்டுத் தொலைத் தொடர்புகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளவும்

கஜமுகா ரேட் சென்ரர்

இல.281, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 2049

(57464)



JAFFNA TECHNICAL INSTITUTE

REG. No. 15251

JAFFNA, SRILANKA

தொழிற் பயிற்சிகள்

♥ Radio, T. V. and Video Deck Repairing

சகல இன RADIO, T. V. VIDEO DECK என்பன திருத்தப்படும் முறை ஆரம்பத்திலிருந்து விளக்கமாக பயிற்சியளிக்கப்படும்.

(காலம் 9 மாதங்கள்)

♥ Motor Rewinding and Electrical Wiring

சகல இன MOTOR, FAN, TRANSFORMAR என்பன REWINDING செய்யப்படும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். மற்றும் மின் உபகரணங்கள் திருத்தப்படும் முறை மற்றும் மின்சார வேலைகள் செய்யப்படும் முறை என்பனவும் பயிற்சியளிக்கப்படும்.

[காலம் 6 மாதங்கள்]

♥ Motor Mechanism

சகல இன நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் சைக்கிள் என்பன திருத்தப்படும் முறை என்பனவும் பயிற்சியளிக்கப்படும்.

(காலம் 05 மாதங்கள்)

புதிய பயிற்சி ஆரம்பம்

15 - 07 - 1998 (கிழமை நாள்களில்)

18 - 07 - 1998 (சனி, ஞாயிறு நாள்களில்)

குறிப்பு:-

சனி, ஞாயிறு வகுப்புக்கள் தொழில் செய்வோரின் நன்மை கருதி நடைபெறுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களின் கவனத்திற்கு

RADIO பயிற்சி நெறியை முடித்த மாணவர்களுக்கான RADIO Exam. (15-07-1998) புதன்கிழமை நடைபெற இருப்பதால் இதற்கான அனுமதி அட்டைகளை காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

DIRECTOR

52/1, ஸ்ரான்லி வீதி,
(ரயில்வே கடவை அருகில்)
யாழ்ப்பாணம்.

(574 56)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org